**சுருக்கம்**


பாசனம் – திருவண்ணாமலை மாவட்டம் – செங்கம் வட்டம் – சாத்தனூர் நீர்த்தேக்கம் – 2007–2008ம் ஆண்டில் சாத்தனூர் அணை இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்களில் உள்ள பாசன பரப்பிற்காகவும் மற்றும் திருக்கோவிலூர் அணைக்கட்டு பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு இரண்டாம் போக பாசனத்திற்காகவும் – தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.


---

பொதுப்பணித் (ட்டி2) துறை

அரசாணை(நிலை)எண். 34 நாள் : 7.2.2008

சர்வஜித் – தை 24

திருவள்ளுவர் ஆண்டு - 2039

படிக்க:

1) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எம்2/68382/2007 நாள் 23.1.2008.
2) விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண்.ஜி2/55871/07 நாள் 25.1.2008.
3) சென்னை மண்டல தலைமைப்பொறியாளர், அவர்களின் கடித எண்.தொ5(4)/0688/06, நாள்: 28.1.08.

-------

ஆணை:

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் ஆட்சியர்கள் மற்றும் பொதுப்பணித்துறை சென்னை மண்டல நீர்வள ஆதார அமைப்பு, தலைமைப் பொறியாளர் ஆகியோர்களின் பரிந்துரைகளை ஏற்று, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலை (மற்றும்) விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த சாத்தனூர் ஆயக்கட்டு பாசன நிலங்கள் 45,000 ஏக்கருக்கு 11.2.2008 முதல் சுழற்சி முறையில் 5 தவணைகளில் 90 நாட்களுக்கு தண்ணீர் வழங்கவும் திருக்கோவிலூர் பெண்ணையாறு பாசன பழைய ஆயகட்டு 5000 ஏக்கர் நிலங்களுக்கு 1200 மி.க.அடி வீதமும் நீரினை நீர்பங்கீடு விதியின்படி பிப்ரவரி முதல் ஏப்ரல் 30க்குள் வேண்டும் பொழுது மூன்று தவணைகளில் திறந்து விடவும் அரசு ஆணையிடுகிறது.

2. மேலும் தற்போதைய நீர் இருப்பு 4794.54 மி.கன அடியாக இருப்பதால் விவசாயிகள் தண்ணீரை நீர்பங்கீடு விதியின்படி சிக்கனமான முறையில் பயன்படுத்தி பாசனம் மேற்கொள்ள தக்கவகையில் நடவடிக்கை எடுக்கும்படி சென்னை மண்டல நீர்வள ஆதார அமைப்பு, தலைமைப் பொறியாளர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை, சென்னை மண்டலம், சென்னை – 5
சிறப்பு ஆணையர் (ம) நிலநிர்வாக ஆணையர், சென்னை–5
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நிர்வள ஆதார அமைப்பு (ம) தலைமைப் பொறியாளர் (பொ) சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை.
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம்.

நகல்
அமைச்சர் (பொதுப்பணி (ம) சட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

**பிரிவு அலுவலர்.**